# P.L.RAJ IAS & IPS ACADEMY

**Building Bureaucrats Since 2006**

## September 5, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. புவி கண்காணிப்பு மற்றும் பேரிடர் மீட்புப் பணிகளுக்காக இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ) சார்பில் ஜிஎஸ்எல்வி எஃப்-17 ராக்கெட் மூலம் விண்ணில் செலுத்தப்பட்ட அதிநவீன இஓஎஸ்-05 (ஜிஐசாட் 1-ஏ) செயற்கைக்கோள் திட்டமிட்டபடி புவிவட்ட சுற்றுப்பாதையில் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டது.

i. நம் நாட்டின் தொலையுணர்வு பயன்பாட்டுக்காக இஸ்ரோ சார்பில் கார்டோசாட், ஸ்காட்சாட், ரிசாட் உள்பட பல்வேறு செயற்கைக்கோள்கள் விண்ணில் நிலை நிறுத்தப்பட்டு வருகின்றன. அந்த வரிசையில் புவி கண்காணிப்பு மற்றும் பேரிடர் மீட்புப் பணிகளுக்காக இஓஎஸ்-03 (ஜிஐசாட்) என்ற அதிநவீன 'ஜியோ இமேஜிங்' செயற்கைக்கோளை இஸ்ரோ தயாரித்தது. இது ஜிஎஸ்எல்வி எஃப்-10 ராக்கெட் மூலம் கடந்த 2021 ஆக.12-ஆம் தேதி விண்ணில் செலுத்தப்பட்டது. ஆனால், கிரையோஜெனிக் இயந்திரத்தில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறால் அந்தத் திட்டம் தோல்வியில் முடிந்தது.

ii. இதையடுத்து, ஜிஐசாட் செயற் கைக்கோள் மீண்டும் உருவாக்கப்பட்டு விண்ணில் ஏவப்படும் என்று இஸ்ரோ அப்போது அறிவித்தது. அதன்படி வடிவமைக்கப்பட்ட அதிநவீன இஓஎஸ்-05 (ஜிஐசாட் 1-ஏ) செயற்கைக்கோளை, ஜிஎஸ்எல்வி எஃப்-17 ராக்கெட் மூலம் விண்ணில் செலுத்த இஸ்ரோ திட்டமிட்டது.

iii. 2,367 கிலோ எடை:

- இந்த ராக்கெட் ஏவுதலின் இறுதிக்கட்டப் பணிகளுக்கான 27.50 மணி நேர கவுன்ட்டவுன் கடந்த செப். 2-ஆம் தேதி இரவு 11.25 மணிக்கு தொடங்கியது. இதையடுத்து, ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவன் மையத்தின் 2-ஆவது ஏவுதளத்தில் இருந்து ஜிஎஸ்எல்வி எஃப்-17 ராக்கெட் திட்டமிட்டபடி விண்ணில் செலுத்தப்பட்டது.
- தரையில் இருந்து புறப்பட்ட இந்த ராக்கெட் சுமார் 19 நிமிஷங்களில் திட்டமிட்ட புவிவட்ட சுற்றுப்பாதையில் இஓஎஸ்-05 செயற் கைக்கோளை வெற்றிகரமாக நிலை நிறுத்தியது. இஓஎஸ்-05 செயற்கைக்கோள் 2,367 கிலோ எடையுடையது. இதன் ஆயுள்காலம் 10 ஆண்டுகள். தற்போது குறைந்தபட்சம்

171 கி.மீ., அதிகபட்சம் 31,026 கி.மீ. கொண்ட சுற்றுப்பாதையில் வலம்வரும் செயற்கைக்கோள், அதிலுள்ள உந்துவிசை மோட்டார்கள் மூலம் படிப்படியாக இறுதிக்கட்ட சுற்றுப்பாதைக்கு மாற்றப்படும்.

iv. 36,000 கி.மீ. தொலைவில்

- இஸ்ரோவின் வரலாற்றில் முதல் முறையாக புவி கண்காணிப்புப் பணியை அடிப்படையாகக் கொண்ட செயற்கைக்கோள் ஒன்று தரையில் இருந்து 36,000 கி.மீ. தொலைவில் உள்ள புவிவட்டப்பாதையில் இருந்து ஆய்வுப் பணிகளை மேற்கொள்ள உள்ளது.
- கடந்த பிப்ரவரி நிலவரப்படி இந்தியாவிடம் 27 தொலையுணர்வு செயற்கைக்கோள்கள் செயல்பாட்டில் இருந்தன. அவை அனைத்தும் புவி தாழ்வட்டப்பாதை அல்லது சூரிய ஒத்திசைவு சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தப்பட்டன.
- இஓஎஸ்-05 செயற்கைக்கோள் வானிலை, விவசாயம், மேகவெ டிப்பு, கடல்சார் கண்காணிப்பு, கனிமவள ஆராய்ச்சி உள்பட பல்வேறு தரவுகளை நிகழ்நேரத்தில் வழங்கும். குறிப்பாக, புவியின் ஒரு பகுதியை நிகழ்நேர தன்மையில் தினமும் 4 அல்லது 5 முறை படம்பிடிக்கும் திறன், நாட்டின் பாதுகாப்பு மேம்பாடு உள்பட பல்வேறு சிறப்பம்சங்கள் உள்ளன. இதிலுள்ள இரண்டுவிதமான 3டி கேமராக்களால் புவிப்பரப்பை 40 மீட்டர் வரை மிக துல்லியமாகப் படம் எடுக்க முடியும். வானிலை நிலவரங்களைத் தொடர்ந்து ஆராய்ந்து, புயல் உள்பட பேரிடர் காலங்களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ள உதவும். மேலும், இந்தியாவின் எல்லைப் பகுதிகளை தொடர்ச்சியாகக் கண்காணித்து நாட்டின் பாதுகாப்பு அமைப்புகளுக்குத் தேவையான முக்கியத் தகவல்களை அளிக்கும்.
- இதற்கிடையே, நிகழாண்டில் இதுவரை 2 ஏவுதல்களை மட்டுமே இஸ்ரோ நிகழ்த்தியுள்ளது. கடந்த ஜன.12-ஆம் தேதி விண்ணில் செலுத்தப்பட்ட இஓஎஸ் என்-1 செயற்கைக்கோள் தோல்வி அடைந்தது. சுமார் 8 மாதங்களுக்குப் பிறகு பெரும் எதிர்பார்ப்புகளுக்கு இடையே ஏவப்பட்ட ஜிஎஸ்எல்வி எஃப்-17 வெற்றி பெற்றுள்ளது. இது ஜிஎஸ்எல்வி வகையில் 19-ஆவது ராக்கெட்டாகும். இதில் 13 வெற்றியும், 6 தோல்வியும் கிடைத்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

v. தூத்துக்குடி மாவட்டம், குலசேகரன்பட்டினத்தில் அமைக்கப்பட்டுவரும் ராக்கெட் ஏவுதளம் அரசு கட்டமைப்புதான் என்றும், அதன் பராமரிப்புப் பணி மட்டுமே தனியார் மூலம் மேற்கொள்ளப்பட உள்ளது என்றும் இஸ்ரோ

தலைவர் வி.நாராயணன் தெரிவித்துள்ளார். ஸ்ரீஹரிகோட்டாவில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:

- நம் நாட்டின் புவி கண்காணிப்பு, பேரிடர் மேலாண்மை உள்பட பல்வேறு பயன்பாடுகளுக்காக 36,000 கி.மீ. புவிவட்ட சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தப்படும் முதல் செயற்கைக்கோள் என்பதால் இந்தத் திட்டமானது சிறப்பு வாய்ந்ததாகும். ஜிஎஸ்எல்வியில் ஆரம்பகால ஏவுதலில் 1,536 கிலோ வரை மட்டுமே செலுத்த முடிந்தது. ஆனால். தற்போது 2,367 கிலோ எடையைச் சுமந்து சென்று வரலாறு படைத்துள்ளது.
- தூத்துக்குடி மாவட்டம், குலசேகரன்பட்டினத்தில் அமைக்கப்பட்டு வரும் ராக்கெட் ஏவுதளம் அரசு கட்டமைப்புதான். ஆனால், அவற்றின் பராமரிப்பு தனியார் மூலம் மேற்கொள்ளப்பட உள்ளது. அங்கு இஸ்ரோ மற்றும் தனியார் ஊழியர்கள் இருப்பார்கள். அங்கிருந்து இஸ்ரோ மற்றும் தனியார் செயற்கைக்கோள்கள் செலுத்தப்படும்.
- ககன்யான் திட்டத்துக்காக இதுவரை சுமார் 8,000 சோதனைகள் நிறை வடைந்துள்ளன. அடுத்தகட்டமாக, ஆளில்லா விண்கலத்தை ஏவும் திட்டத்தைச் செயல்படுத்த தயாராகி வருகிறோம் என்றார் அவர்.

2. அமெரிக்காவின் கடும் பொருளாதாரத் தடைகள் மற்றும் நிதி நெருக்கடிகளுக்கு மத்தியில், அந்நிய முதலீடுகள், வர்த்தகம் மற்றும் சுற்றுலாவை ஈர்க்கும் நோக்கில் புதிய தாராளமய சீர்திருத்தங்களை கியூபா அரசு வெளியிட்டுள்ளது.

i. கியூபாவின் அதிகாரபூர்வ அரசிதழில் 34 பக்கங்கள் கொண்ட புதிய விதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. கடந்த ஜூன் மாதம் அறிவிக்கப்பட்ட 176 மாற்றங்களைத் தொடர்ந்து, 1959-ஆம் ஆண்டு புரட்சிக்குப் பிறகு கியூபாவின் சோசலிச பொருளாதார அமைப்பில் மேற்கொள்ளப்படும் மிகப் பெரிய மாற்றமாக இது பார்க்கப்படுகிறது.

ii. புதிய விதிமுறைகளின்படி, தனியார் நிறுவனங்கள் ஊழியர்களை பணிக்கு எடுப்பதற்கும், நீக்குவதற்கும் அரசு நிறுவனங்களை அணுக வேண்டிய கட்டாயம் ரத்து செய்யப்பட்டுள்ளது.

iii. மேலும், வெளிநாட்டு வர்த்தகத்தில் ஈடுபடும் உள்நாட்டு மற்றும் கூட்டு நிறுவனங்கள், வெளிநாட்டு வங்கிகளில் கணக்கு தொடங்க இனி அரசின் முன்அனுமதியைப் பெற வேண்டியதில்லை; அரசுக்கு தகவல் தெரிவித்தால் போதுமானது என அறிவிக்கப்பட்டுள்ளது.

iv. இத்துடன், அரசு வசமிருந்த சுற்றுலாத் துறையில் இனி தனியார் நிறுவனங்கள் பயண முகமைகளை நடத்தவும், தனிநபர்கள் சுற்றுலா வழிகாட்டிகளாக செயல்படவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

v. புதிய தடைகள்:

- இதனிடையே, கியூபாவின் முன்னாள் அதிபர் ரெளல் காஸ்ட்ரோவின் பேரன் ஃபிடல் எர்னஸ்டோ காஸ்ட்ரோ- (31) மற்றும் அந்நாட்டின் 5 அரசு நிறுவனங்கள் மீது அமெரிக்கா புதிய பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது.
- கம்யூனிஸ நாடான கியூபா மீது பொருளாதார அழுத்தங்களை தீவிரப்படுத்தும் டிரம்ப் நிர்வாகத்தின் நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக, அந்நாட்டு அரசு வங்கி, நிக்கல் சுரங்கத் தொழில் சார்ந்த 2 நிறுவனங்கள் மற்றும் எரிசக்தி துறையைச் சேர்ந்த 2 நிறுவனங்கள் மீது இத்தடைகள் விதிக்கப் பட்டுள்ளன.

3. உலகப் போருக்குப் பிந்தைய இத்தாலியின் வரலாற்றில் மிக நீண்ட காலம் தொடர்ச்சியாக பிரதமர் பதவியை வகித்தவர் என்ற பெருமையை எட்டியுள்ள ஜார்ஜியா மெலோனிக்கு பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

i. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு இத்தாலியில் பிரதமராகப் பதவி வகித்தவர்களில், 49 வயதாகும் மெலோனி கடந்த 2022- ஆம் ஆண்டு அக்டோபர் 22-ஆம் தேதி முதல் தொடர்ச்சியாக 1,413 நாள்கள் பதவி வகித்து மிக நீண்ட கால பிரதமராகப் பதவி வகித்தவர் என்ற பெருமையை வியாழக்கிழமை எட்டினார். இத்தாலியில் பிரதமர் பதவியை வகிக்கும் முதல் பெண் இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

4. கிழக்கு இமயமலை மாநிலமான சிக்கிமில் ஆபத்தான நிலையில் 40 பனிப்பாறை ஏரிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன; இதில் 16 ஏரிகள் உடையக்கூடிய அதிக அபாய முள்ளவை என வகைப்படுத்தப்பட்டுள்ளது.

i. இந்த ஏரிகள் உடைந்தால், நதிப் பள்ளத்தாக்கின் கீழ்பகுதிகளில் பேரழிவு ஏற்படக் கூடும் என்று மாநில அரசு தெரிவித்துள்ளது. நேபாளத்தில் சிலதினங்களுக்கு முன்பு ஏற்பட்ட பெருவெள்ளத்தில் ஏராளமானோர் உயிரிழந்த நிலையில், இந்தத் தகவல்கள் முக்கியத்துவம் பெற்றுள்ளன.

ii. இந்நிலையில், சிக்கிம் முதன்மைச் செயலர் சந்தீப் தாம்பே, முதல்வர் பிரேம்

சிங் தமாங்கின் ஊடக செயலர் யூகன் தமாங், மாநில அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை முதன்மை இயக்குநர் டி.ஜி.ஷிரேஸ்தா ஆகி யோர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

iii. சிக்கிமில் தொலைதூர உணர் திறன் சாதனங்கள் மற்றும் செயற்கைக்கோள் புகைப்படங்கள் உதவியுடன் பனிப்பாறை ஏரிகளின் நிகழும் மாற்றங்கள் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் 40 பனிப்பாறை ஏரிகள் ஆபத்தானவையாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இதில் உடைவதற்கான அதிக அபாயமுள்ளவையாக 16 ஏரிகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக சாக்கோ சோ என்ற ஏரி மிக அதிக அபாயமுள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

5. நாடாளுமன்ற காங்கிரஸ் குழுத்தலைவர் சோனியா காந்தியின் சுயசரிதை புத்தகத்தைபிர பலவெளியீட்டாளரான ஹார்ப்பர் காலின்ஸ் இந்தியா நிறுவனம் பிரசுரிக்க முன்வந்துள்ளது.

i. 'பிலாங்கிங்; எ ஜர்னி ஆஃப் லவ்' என்ற தலைப்பில் எழுதப்பட்டுள்ள அந்தப் புத்தகம் வரும் நவம்பர் மாதம் 10-ஆம் தேதி பிரசுரிக்கப்படும் என்று அந்த நிறுவனம் வெள்ளிக்கிழமை தெரிவித்தது.

ii. பென்குயின் ரேண்டம் ஹவுஸ் இந்தியா நிறுவனம் மறுத்துவிட்டதால், சோனியாவின் சுயசரிதை வெளியாவதில் நீடித்துவந்த நிச்சய மற்ற சூழல் இதன் மூலம் முடிவுக்கு வந்துள்ளது. பென்குயின் ரேண்டம் ஹவுஸ் இந்தியா நிறுவனம் ஏற்கெனவே அறிவித்த தேதியிலேயே இந்தப் புத்தகம் பிரசுரிக்கப்பட உள்ளது.

6. மாவட்ட நீதிபதிகள் ஓய்வுபெறும் வயதை 62-ஆக அதிகரிக்க தமிழ்நாடு உள்பட 7 மாநிலங்கள் ஒப்புக்கொண்டிருக்கின்றன.

i. இதற்காக பணி விதிமுறைகளில் 7 மாநிலங்களும் திருத்தம் மேற்கொள்ள வேண்டும். இந்தத் திருத்தங்களை முடிந்தவரை 2 மாதங்களில் விரைவாக செய்து மாவட்ட நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதை முறைப்படி 62-ஆக அதிகரிக்க வேண்டும்.

7. தில்லியில் பிரிக்ஸ் அமைப்பிலுள்ள நாடுகளின் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதிகளின் மாநாடு தொடங்கியது.

i. பிரிக்ஸ் அமைப்பில் பிரேஸில், ரஷியா, இந்தியா, சீனா, தென் னாப்பிரிக்கா, எகிப்து, எத்தியோப்பியா, ஈரான், ஐக்கிய அரபு அமீரகம், சவூதி அரேபியா, இந்தோனேசியா ஆகிய நாடுகள் அங்கம் வகிக்கின்றன. தற்போது இதன் தலைமைப் பொறுப்பை இந்தியா வகிக்கிறது. இந்த அமைப்பின் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதிகள், மூத்த நீதித் துறை தலைவர்கள் மாநாடு தில்லியில் தொடங்கியது.

ii. இந்த மாநாடு இந்திய உச்சநீதிமன்றத்தால் வரும் 6-ஆம் தேதி வரை நடத்தப்படுகிறது. மாநாட்டின் இடையே உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி சூர்ய காந்த், பிரிக்ஸ் அமைப்பு நாடுகளின் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதிகளுடன் கலந்துரையாட உள்ளார். அதேபோல், பிரிக்ஸ் அமைப்பின் நட்பு நாடுகள் எனப்படும் பெலாரஸ், பொலிவியா, கியூபா, கஜகஸ்தான், மலேசியா, நைஜீரியா, தாய்லாந்து, உகாண்டா, உஸ்பெகிஸ்தான், வியத்நாம் ஆகிய நாடுகளின் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதிகளுடனும் சூர்ய காந்த் கலந்தாலோசனை நடத்த உள்ளார்.

## 8. SCO-வின் புவிசார் அரசியல் மற்றும் பொருளாதார நிலை

i. 1996-இல் நிறுவப்பட்ட ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு (SCO), அரசியல், பொருளாதாரம், பாதுகாப்பு மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு ஒத்துழைப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்தும் ஒரு முக்கிய சர்வதேச தளமாகும்; இது யூரேசியாவில் ஒரு சக்திவாய்ந்த மற்றும் தவிர்க்க முடியாத பிராந்திய சக்தியாக உருவெடுத்துள்ளது.

- தொடக்கத்தில் "ஷாங்காய் ஐந்து" (சீனா, கஜகஸ்தான், கிர்கிஸ்தான், ரஷ்யா மற்றும் தஜிகிஸ்தான் ஆகியவற்றை உள்ளடக்கியது) என்ற பெயரில் நிறுவப்பட்ட இவ்வமைப்பு, 2001-இல் உஸ்பெகிஸ்தான் இணைந்தபோது அதிகாரப்பூர்வமாக SCO எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. 2017-இல் இந்தியா மற்றும் பாகிஸ்தான் இணைந்தன; அதனைத் தொடர்ந்து 2023-இல் ஈரான் மற்றும் 2024-இல் பெலாரஸ் ஆகியவை இணைந்ததன் மூலம், தற்போது இதன் உறுப்பு நாடுகளின் எண்ணிக்கை 10-ஆக உயர்ந்துள்ளது.
- SCO உலகின் மிகப்பெரிய பிராந்திய அமைப்பாகும்; இது உலக நிலப்பரப்பில் 24% (யூரேசிய நிலப்பரப்பில் 65%) பரப்பளவையும், உலக மக்கள் தொகையில் 42% பங்கையும் கொண்டுள்ளது.
- SCO உறுப்பு நாடுகளின் கூட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP),

உலகளாவிய GDP-யில் 36% ஆகும்; இது சக்திவாய்ந்த G7 நாடுகளின் கூட்டுப் பங்கான 28%-ஐ விட மிக அதிகமாகும்.

- ஆப்கானிஸ்தான் மற்றும் மங்கோலியா ஆகியவை பார்வையாளர் நாடுகளாகச் செயல்படுகின்றன; அதேவேளையில் எகிப்து, சவுதி அரேபியா, துருக்கி மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் (UAE) போன்ற மத்திய கிழக்கு நாடுகள் உட்பட 15 நாடுகள் அதிகாரப்பூர்வ உரையாடல் கூட்டாளிகளாகச் செயல்படுகின்றன.

ii. நிறுவனக் கட்டமைப்பு மற்றும் 26-வது பிஷ்கெக் உச்சிமாநாடு

- உளவுத்துறைப் பரிமாற்றம், சிறப்புப் பயிற்சி மற்றும் நிறுவன ஒருங்கிணைப்பு ஆகியவற்றை மேற்பார்வையிடும் 'பிராந்திய பயங்கரவாத எதிர்ப்பு அமைப்பு' (RATS), உஸ்பெகிஸ்தானின் தலைநகரான தாஷ்கண்டில் நிரந்தரத் தலைமையகத்தைக் கொண்டுள்ளது.
- 26-வது வருடாந்திர SCO உச்சிமாநாடு 2026 செப்டம்பர் 1 அன்று கிர்கிஸ்தானின் தலைநகரான பிஷ்கெக்கில் நடைபெற்றது; இதன் விளைவாக ஒரு முக்கியமான கூட்டுப் பிரகடனம் வெளியிடப்பட்டது.
- இப்பிரகடனத்தில், ஈரானின் உயரிய மதத் தலைவரான அயதுல்லா அலி கமேனியின் துயரமான மறைவைத் தொடர்ந்து, ஈரான் மக்களுக்கு உறுப்பு நாடுகள் தங்கள் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்தன.

iii. மத்திய கிழக்கு மோதல் மற்றும் உலகளாவிய எரிசக்தி நெருக்கடி குறித்த நிலைப்பாடு

- கூட்டு பிஷ்கெக் பிரகடனமானது, ஈரான் மீதான அமெரிக்க-இஸ்ரேலிய இராணுவத் தாக்குதல்களை வெளிப்படையாக விமர்சித்து கண்டித்தது; இத்தாக்குதல்கள் சர்வதேச சட்டத்தையும் ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்தையும் மீறுவதாகவும், உலக அமைதி, பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மைக்கு அச்சுறுத்தலாக இருப்பதாகவும் அது சுட்டிக்காட்டியது.
- மிகவும் முக்கியமான ஹார்முஸ் நீரிணை (Strait of Hormuz) வழியாக நடைபெறும் கடல்சார் வர்த்தகத்தை இராணுவ மோதல் கடுமையாகப் பாதித்துள்ளதாகவும், இதனால் உலகளாவிய விநியோகச் சங்கிலிகள், எரிசக்திச் சந்தைகள் மற்றும் நிதி அமைப்புகள் சீர்குலைந்துள்ளதாகவும் SCO எச்சரித்தது.
- மோசமடைந்து வரும் உலகளாவிய எரிசக்தி நெருக்கடிக்கு மத்தியில், எரிசக்தித் துறையில் அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் பரஸ்பர நன்மை

பயக்கும் ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதற்கான தனது உறுதிப்பாட்டை இந்த அமைப்பு மீண்டும் உறுதிப்படுத்தியது.

iv. ஒருதலைப்பட்சமான தடைகளுக்கு நேரடி எதிர்ப்பு

- அமெரிக்காவின் பெயரை நேரடியாகக் குறிப்பிடாமல், ஈரான், ரஷ்யா (உக்ரைன் போரைக் காரணமாகக் கொண்டு) மற்றும் அவற்றுடன் வர்த்தகம் செய்யும் நாடுகள் மீது விதிக்கப்பட்ட ஒருதலைப்பட்சமான பொருளாதாரத் தடைகளை SCO-வின் பிரகடனம் கடுமையாகக் கண்டித்தது.
- உலகப் பொருளாதாரத்தில் இத்தகைய ஒருதலைப்பட்சமான கட்டாய நடவடிக்கைகள், ஐக்கிய நாடுகள் சபை மற்றும் உலக வர்த்தக அமைப்பின் (WTO) நிறுவப்பட்ட விதிகளை நேரடியாக மீறுவதாக அந்தப் பிரகடனம் தெரிவித்தது.

v. பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் பிரதமர் மோடியின் உரை

- பயங்கரவாதம், பிரிவினைவாதம் மற்றும் தீவிரவாதம் ஆகிய "மூன்று தீமைகளுக்கு" எதிராக ஒருங்கிணைந்த போராட்டத்தைத் தொடங்க உறுப்பு நாடுகள் தீர்மானித்தன.
- பயங்கரவாதத்திற்கு எதிரான சர்வதேசப் போராட்டத்தில் "இரட்டை நிலைப்பாடுகள்" இருக்கக்கூடாது என்று வலியுறுத்திய SCO, அனைத்து வகையான பயங்கரவாதத்தையும் கடுமையாகக் கண்டித்ததுடன், எல்லை தாண்டிய ஊடுருவலைத் தடுக்க ஒருங்கிணைந்த உலகளாவிய முன்னணியை உருவாக்கவும் அழைப்பு விடுத்தது.
- ஆள் சேர்ப்பு, நிதியுதவி, தீவிரவாதக் கருத்துப் பரவல் மற்றும் பாதுகாப்பான புகலிடங்கள் உள்ளிட்ட பயங்கரவாதத்தின் ஒட்டுமொத்த ஆதரவு கட்டமைப்பும் முழுமையாக ஒழிக்கப்பட வேண்டும் என்று அந்த அமைப்பு அறிவித்தது.
- உச்சிமாநாட்டில் உரையாற்றிய இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, பயங்கரவாதம் ஒரு பெரும் அச்சுறுத்தல் என்பதை மீண்டும் வலியுறுத்தினார்; அத்துடன் அதற்கு எதிராக உறுப்பு நாடுகள் ஒரே குரலில் பேச வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். பாகிஸ்தானின் அரசு ஆதரவு பயங்கரவாதத்தை நேரடியாகக் குறிவைக்கும் வகையிலேயே இந்தக் கருத்து அமைந்திருந்தது.

vi. ஆதிக்க மனப்பான்மைக்கு எதிராகக் குரல் கொடுத்தல்

- பெருகிவரும் பிளவுகள் நிறைந்த உலகச் சூழலில், பிராந்திய ஒத்துழைப்பின்

முக்கியத் தேவையை 'பிஷ்கெக் பிரகடனம்' (Bishkek Declaration) வலியுறுத்தியது.

- மேற்கத்திய வல்லரசுகளின் ஆதிக்கம் செலுத்தும் மற்றும் ஒருதலைப்பட்சமான மேலாதிக்க மனப்பான்மைக்கு எதிராகக் குரல் கொடுப்பதற்கான பிராந்திய நாடுகளின் கூட்டுத் துணிச்சலை இந்த அறிக்கை வெளிப்படுத்தியது.